**OS. No.49 /2022**

P.W.1 - **ஜானகிராமன்**

தேதி: 25.09.2023

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது மனைவி வேலைக்கு செல்வதில்லை. அவர் வீட்டில் தான் இருக்கிறார். அவருக்கு எந்த வருமானமும் கிடையாது என்றால் சரிதான். எனது மனைவிக்கு உடல்நிலை சரியில்லை என்று காட்டுவதற்கு மருத்துவ சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி வங்கியில் அடமானத்தில் இருக்கும் வழக்கு சொத்தின் கடனை அடைப்பதற்காக என்னிடம் பணம் கேட்டார் என்றால் சொத்தை என்னிடம் கிரையம் செய்து வங்கியில் உள்ள கடனை அடைப்பதற்கு பணம் கேட்டார். எனக்கு பிரதிவாதி வங்கியிலிருந்து அவருடைய கடனை அடைப்பதற்கு எனக்கு அறிவிப்பு எதுவும் கொடுத்தார்களா என்றால் இல்லை. வாலாஜா ஸ்டேட் வங்கியிலிருந்து என்னுடைய வங்கி கணக்கில் இருந்து டிமாண்ட் டிராப்ட் மூலம் பணம் எடுத்து வேலூர் ஐடிஎப்சி 1st லிமிடெட் வங்கியில் பிரதிவாதி வங்கி கணக்கில் கட்டினேன். அவ்வாறு கட்டியதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி டிடி 26.10.2021ம் தேதி எடுத்தேன். மேற்படி ஆவணம் வா.சா.ஆ.1 டிடி எடுத்ததாக சொல்லப்படும் தேதியில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளபடி வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்களை என்னிடம் ஒப்படைத்தார். நான் வங்கியில் உள்ள அடமானச் சொத்திற்கு தான் ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் ஜெக்பந்தி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. 15.11.2021 தேதியில் பிரதிவாதிக்கும் எனது மனைவிக்கும் இடையே எந்த பணப்பரிவர்த்தனையும் நடைபெறவில்லை

என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் பொய்யானது என்றும் நான் எனது மனைவிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் எனவே வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH